RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt22s518

OPEN ACCESS

# தந்தை பெரியார் பார்வையில் இரட்டைக் காப்பியங்கள்

ம. பிரகாஷ் [அ, *]

[அ] தமிழ்த்துறை, வேல்ஸ் அறிவியல் தொழில்நுட்ப உயர் ஆராய்ச்சி நிறுவனம், சென்னை-600117, தமிழ்நாடு, இந்தியா

# Twin Epics in Thanthai Periyar's Perspective

**M. Prakash** [a, *]

[a] Department of Tamil, Vels Institute of Science, Technology & Advanced Studies (VISTAS), Chennai-600117, Tamil Nadu, India

* Corresponding Author: tamilpulavan.mp@gmail.com

Received: 08-08-2021
Revised: 27-04-2022
Accepted: 07-05-2022
Published: 25-08-2022

Check for updates

## ABSTRACT

The origin, development, and history of the Dravidian movement have a long tradition. Thanthai Periyar occupies a very important place in this history. A long list continues after him like Arignar Anna, Pavendher Bharathidasan, Kalaignar Karunanidhi. In the various works of the Dravidian movement, they have considered the literature and highlighted the pros and cons of it and how all the pro-religious ideas have infiltrated the Tamil society. Epics have a special place in the history of Tamil literature. There are many categories in them. In this regard, Silambam and Megalai are considered twin epics. Regarding these, various studies are happening from time to time. There are many differences between how other Tamil scholars view these examples and Periyar's view of these examples. In particular, the purpose of this article is to study how Thanthai Periyar's ideas have made people rational through twin epics. This article also conveys the idea that people should think about the benefit of reasoning and get rid of ignorance.

**Keywords:** Dravidian Movement, Twin Epics, Thanthai Periyar, Silambam

## முன்னுரை

ஈரோட்டில் வெங்கட்ட நாயக்கருக்கும் சின்னத்தாயம்மாளுக்கும் 17.09.1879 இல் மகனாகப் பிறந்தார் இராமசாமி. இவர் அனைவராலும் இராமசாமி நாயக்கர் என மரியாதையாக அழைக்கப்பட்டவர். (அக்காலத்தில் சாதிப்பெயரைப் இணைத்து அழைப்பது மரியாதையாகக் கருதப்பட்டது) பின்னாளில் சாதிப் பெயர் எவ்வளவு கேவலமானது என்று கருதிய, ஈ.வெ.இரா. அதனைத் துறந்தார். பின்னர், ஈ.வெ. இராமசாமிப் பெரியார் என முதன் முதலில் அழைத்தவர் வழக்கறிஞர் நாகர்கோவில் பி.சிதம்பரம் பிள்ளை. பின் முறையாக, 13.11.1938ஆம் ஆண்டு சென்னையில் நடைபெற்ற பெண்கள் மாநாட்டில் 'பெரியார்' என்ற பட்டம் வழங்கப்பட்டது. அதிலிருந்து இவரை அனைவரும் அன்புடன் பெரியார் என்றே அழைத்து வந்தனர். சிறிதுகாலம் கழிந்த பின் தந்தை பெரியாராக மாறினார். ஆனால் இன்றைய சூழலில் தாத்தா பெரியாராக மாறிவிட்டார். இத்தகைய விளக்கங்களின் பின்னால் பெரியாரின் வாழ்க்கை முழுவதுமே அடங்கியுள்ளன. இவ்வாறாக, பல்வேறு காலகட்டங்களில் பெற்ற பெயர் மாற்றத்திற்கேற்பத் தன் கொள்கைப் பிடிப்பினுள் மாற்றம் இல்லாமல் கடைசி காலம் வரை உறுதியாக இருந்தார். அனைத்து விதமான மாற்றத்திற்குப் பின்னும் பல்வேறு அரசியல் சூழல்கள் இருக்கின்றன. பெயரின் மாற்றத்திற்கேற்ப சமூகத்தின் மாற்றமும் நிகழ்ந்து கொண்டேயிருந்தது. பெரியாரின் சிந்தனைகள் அனைத்துமே சொல்லாகவும் செயலாகவும்

மாறியுள்ளன. இவை அனைத்துக்குமான பதிவுகள் இதழ்கள், நூல்கள் எனப் பல வடிவங்களில் உள்ளன. பல்வேறு துறைகளில் நாடு, இனம், மொழி, சமூகம், சமயம் இன்னும் பலவற்றில் தன்னுடைய தடம் பதித்தவர் பெரியார். இவற்றில் செவ்வியல் இலக்கியம் குறித்தான புரில்தல்கள் எவ்வாறு உள்ளது என்றும் அதனை வெகுசன மக்களிடம் கொண்டு சேர்த்ததும் அதனால் மக்கள் பெற்ற அறிவும் சிந்தனைக்குரியது.

தந்தை பெரியாரைப் பற்றிப் பலரும் பலவாக வர்ணித்துக் கூறியுள்ளனர். இருப்பினும் பெரும்பாலும் பாரதிதாசனின் கவிதைதான் மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று ஆய்வாளர்கள் கருதுகின்றனர். அக் கவிதையானது,

“தொண்டு செய்து பழுத்த பழம்!

தூயதாடி மார் பில்விழும்!

மண்டைச் சுரப்பை உலகுதொழும்!

மனக்குகையில் சிறுத்தை எழும்!”

என்று கூறி, ‘அவர்தாம் பெரியார்! - பார்’ என்று குறிப்பிடுவார் (Bharathidasan, 2007). இப்பாடலின் வரிகளுக்கு ஏற்பவே வாழ்ந்தவர் பெரியார் என்பதனைப் படித்தவர்கள் எளிதில் உணரலாம்.

பெரியாரின் கொள்கை கோட்பாடுகளையெல்லாம் பின்பற்றிய பல்வேறு அறிஞர்கள், புலவர்கள், கலைஞர்கள் எல்லாம் காலப்போக்கில் சிலர் சில கொள்கையிலிருந்து விலகத் தொடங்கினார்கள். இவற்றிற்கெல்லாம் அடிப்படைக்காரணம், கட்சி அமைப்பேயாகும். கழகங்கள் மட்டும் போதும் என்ற பெரியாரின் அறிவுரையை அண்ணா மீறியதால் தான் தி.மு.க. என்ற கட்சி உருவானது. இதற்கு அண்ணாவின் விளக்கம் அதாவது, ‘கழகத்தின் கொள்கைளையெல்லாம் கட்சியின் ஊடாக ஏற்படும் ஆட்சி அதிகாரத்தில் தான் செயல்படுத்த முடியும்’ என்பது ஏற்புடையதாகும். இதனைப் பிற்காலங்களில் பெரியாரே ஏற்றுக் கொண்டார். இத்தகைய பெரியாரும் அவரின் வழித்தோன்றல்களும் தமிழ் இலக்கியச் சூழலில் மிகப் பெரிய மாற்றங்களையெல்லாம் ஏற்படுத்தினார்கள். இதில் குறிப்பாக, தந்தை பெரியாரின் இரட்டைக்காப்பியங்கள் குறித்தான சிந்தனையின் பதிவுகளை, இவ்வாய்வுக் கட்டுரையில் காணலாம். இதனை,

"இரட்டைக்காப்பியங்கள்

சிலப்பதிகாரம்

காப்பியத்தின் கதைப்போக்கு

கண்ணகி கதையின் மடைமை

மணிமேகலை"

எனப் பிரித்துக் காண்பதின் ஊடாக, பெரியாரின் இரட்டைக்காப்பியங்கள் குறித்தான மன நிலையை உணர முடியும் (Thanthai Periyar, 2005).

## இரட்டைக் காப்பியங்கள்

தமிழ் இலக்கிய வரலாற்றில் காப்பியங்களுக்கெனத் தனியிடம் உண்டு. அவற்றுள் பல பிரிவுகள். அதில் சிலம்பும் மேகலையும் இரட்டைக் காப்பியங்களாகக் கருதப்படுகின்றன. இவற்றினைக் குறித்த, பல்வேறு ஆய்வுகள் காலந்தோறும் நிகழ்ந்துகொண்டே உள்ளன. மற்றையத் தமிழ் அறிஞர்கள் இக்காப்பியங்களைக் காண்பதற்கும் பெரியார் இக்காப்பியங்களைக் காண்பதற்கும் வேறுபாடுகள் பல உள்ளன. இவற்றைக் குறித்து விரிவாகக் காணலாம்.

## சிலப்பதிகாரம்

தமிழ் இலக்கியத்தில் சிலப்பதிகாரத்திற்கென தனிப்பட்ட நீண்ட நெடிய வரலாறும் அது சார்ந்த பல இலக்கியப் படைப்புகளும் உள்ளன. உ.வே.சா. சிலப்பதிகாரத்தை முழுமையாக வெளியிட்ட பின், ரா.பி.சேதுப்பிள்ளை, ந.மு.வேங்கடசாமி நாட்டார், திரு.வி.கலியான சுந்தரனார், தெ.பொ.மீனாட்சிசுந்தரனார், மு.வரதராசனார் போன்ற பல அறிஞர்கள் சிலப்பதிகாரத்தின் பொருண்மையிலும் இலக்கியத் தன்மையிலும் தன்னைப் பறிகொடுத்தனர். இதில் சிலம்பொலி செல்லப்பனார் உட்பட பலருக்கு சிறப்புப் பட்டங்கள் எல்லாம் கொடுக்கப்பட்டன. இத்தகைய சிலம்பு குறித்தக் கொண்டாட்டங்கள் ஒரு புறமிருக்க மற்றொரு புறம் தந்தை பெரியார் சிலப்பதிகாரத்தை ஓர் இலக்கியமாக ஏற்க முடியாது என்கிறார். இதற்கான காரணங்களைப் பின்வருமாறு விளங்கிக் கொள்ளலாம்.

## காப்பியத்தின் கதைப் போக்கு

சிலப்பதிகாரக் காப்பியத்தின் கதைப்போக்கே மற்றொருவர் கூறுவதைக் கேட்டு எழுதியதாக இந்நூலாசிரியர் குறிப்பிடுவார். அதனை ஏற்றுக் கொண்டாலும் சிலம்புக்கு ஈடுஇல்லை என்றும் குடி மக்கள் காப்பியம் என்றும் இன்னும் பலவாறாக அறிஞர்கள் மக்களிடையே அறிமுகப்படுத்திவிட்டனர். இவற்றின் கதைப் போக்குகளை உள்ளது உள்ளபடி கூறாமல் மறைத்துவிட்டனர். இத்தகைய கதையின் உட்கூற்றை உள்ளவாறே பெரியார் கூறும் போது,

- “போன ஜன்மம், வருகிற ஜன்மம் என்று தலைவிதியைக் காட்டி மனிதனை எப்படிப்பட்ட இழிவுக்கும் ஆளாகச் செய்கிறது.
- ஆருடம், ஜோதிடம், பில்லி சூனியம் ஆகியவற்றைப் பற்றிச் சொல்லுகிறது.
- முட்டாள் தனமான கற்பையும் பெண் அடிமையையும் பெருமைப்படுத்துகிறது.
- பொய்குற்றம் சாட்டப்பட்டதன் உண்மையைக் கண்டுபிடிக்க முடியாத அரசன் கோவலனை வெட்டிக் கொல்லச் சொல்லுகிறான். கோவலன் இறந்து போகிறான்.
- இதையறிந்த அம்பாள் கண்ணகிக்குப் பெரும்கோபம் வந்து நிரபராதிகளான மதுரை மக்களைச் சுட்டுச் சாம்பலாக்கினாள்.
- இந்த அம்பாளின் கற்பைப் பற்றிச் சொல்லுவதாய் இருந்தால், தேவடியாள் வீட்டிற்குக் கணவன் போனதை அறிந்த கண்ணகி, அந்தத் தேவடியாளை ஏதாவது செய்திருக்க வேண்டும்.
- தாசி மாதவி, கோவலன் கண்ணகியின் கணவன் என்று தெரிந்து அவனை அனுபவிக்கிறாள். தேவடியாளுக்கு இதுவா தர்மம் அப்படிப்பட்டவளுக்குக் கண்ணகி பொருள் கொடுத்து வசதி செய்யலாமா
- கோவலன் ஒழுக்கமற்றவன்.
- கண்ணகி புத்தியற்ற மடப்பெண்.
- இந்த அம்மாளுக்குக் கோபம் வந்ததும், தன் மார்பைத் திருகி எறிகிறாள். இது என்ன புத்தி மார்பைக் கையில் திருகினால் வந்துவிடுமா இந்தப்படி நடந்த சங்கதியும் அனுபவமும் சிலப்பதிகாரம் தவிர வேறு எதிலும் எங்கும் காணக்கிடைக்கவில்லை. அந்தப்படி திருகிப் பிடுங்கின மார்பு (முலை) வீசி எறிந்தால் அது நெருப்புப் பற்றிக் கொள்ளுமா அதில் பாஸ்பரஸ் இருக்குமா இந்த மூட நம்பிக்கைக் கற்பனையானது என்ன பயனைக் கொடுக்கிறது. இதனால் கண்ணகிக்கு வீரம் இருந்ததாகக் காட்ட முடியுமா?
- பாண்டியன் விசாரனை செய்து, அவனுக்குக் கிடைத்த உண்மை மீது கோவலனுக்குத் தண்டனை விதித்தான்.
- ஆனால், கண்ணகி ஒரு விசாரணையும் செய்யாமல் ஒரு குற்றமும் காணாமல் நிரபராதிகளான மக்களை, பெண்களைச் சுட்டு எரித்துக் கொன்றாள்.
- இவள் கற்புக்கரசி, வணங்கத்தக்கவள், தெய்வமானவள். பாண்டியன் ‘குற்றவாளி’. இதுதானே சிலப்பதிகாரக் கதை” என்று கூறுவதிலிருந்து, சிலப்பதிகாரத்தின் கதை ஆரியத் தாக்கத்திற்கு உட்பட்டுள்ளதை உணர முடிகிறது. இத்தகைய காப்பியத்திற்கு மாநாடுகள் எல்லாம்

நடத்துவதையும் பெரியார் வன்மையாகக் கண்டிக்கிறார் (Kamalakkannan, 2001). இவர்கள் எல்லாம் மாநாடுகளிலும் மற்ற சொற்பொழிவுகளிலும் கண்ணகிதான் கற்புடையவள் என்று கூறுகிறார்கள். எனில் மற்றவர்களுக்குக் கற்பு இல்லையா? என்ற கேள்வியும் எழுகின்றன. இவ்வாறாக, கற்பிற்கு, அடையாளமாகப் பல கதைகளைக் கூறி, பெண்களையெல்லாம் அடிமைப்படுத்துவதே நோக்கமாகக் கொண்டுள்ளனர் புலவர்கள் என்கிறார்.

இதனை, "இது போன்ற கதைகள் பெண்களுடைய அடிமைத் தனத்திற்கு அடிகோலுதலாகவும், முட்டாள்தனத்திற்கு மூலாதாரமாகவும், பிற்போக்கிற்கு வழி அமைப்பதாயும், பார்ப்பானுடைய உயர்வைக் காப்பாற்றுவதற்காகவும் செய்யப்பட்ட இலக்கியங்களே தவிர, மனித சமுதாயத்திற்கு எந்த நன்மைக்காகவும் செய்யப்பட்ட இலக்கியங்களாகாது" என்கிறார் (Thanthai Periyar, 2005).

## கண்ணகிக் கதையின் மடமை

சிலப்பதிகாரத்தில் கண்ணகியின் போக்கு மடத்தனமானதாக இருந்துள்ளது. இதனைப் பல்வேறு சான்றுகளையெல்லாம் கொண்டு விளக்கியுள்ளார் பெரியார். இத்தகைய கண்ணகியின் கதையில் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கற்பனைகள் பல உள்ளன. சான்றாக, கண்ணகி என்ற ஒரு பெண் தன்னுடைய மார்பைத் திருகி, மதுரையின் மாநகர் மீது வீசுகிறாள். உடனே, மதுரை முழுவதும் தீக்கிறையாகி விட்டது. அப்போது, அக்னி பகவானக்கு ஆணையிடுகிறாள். 'பார்ப்பனர்களை அழிக்காதே!' என்று. எத்தகைய பார்ப்பனர்களின் சூழ்ச்சி என்பதனைப் பகுத்தறிவுள்ள அனைவரும் ஏற்பர். கண்ணகியின் கற்புக்கு மேலும் ஒரு எடுத்துக்காட்டாக, கோவலன் தாசியான மாதவியோடு கூடியிருக்கும் போதும் அவனுக்குப் பொருளுதவி செய்தாள் என்பதாகும். இது அறிவுக்கு ஒப்பானதாக உள்ளதா என்பதும் சிந்திக்கத்தக்கது. இதனைக் குறித்து, "இத்தகைய முட்டாள் தனமான கற்பு எங்காவது சிறந்த வீரத் தமிழ்ப் பண்பாகுமா? தமிழ்ப்பண்பு இத்தகைய கற்பையா தமிழ், மக்களுக்குப் போதித்து இருக்கிறது? உண்மை தமிழச்சியானால் அவள் ஒன்று மாதவி வீடேறி அந்தக் கோவலனைக் கட்டி இழுத்து வந்திருக்க வேண்டும். அல்லது அவனை அவன் விருப்பப்படியே விட்டுவிட்டுத் தான் வேறொரு ஆடவனை மணந்திருக்க வேண்டும்; இதை எல்லாம் செய்வதை விட்டுத்தன் கணவன், மேலும் ஒரு தாசியோடு கூடிக் குலாவிக் கொண்டிருக்கட்டும் என்று தன் நகையையும், சேலையையும் அந்தத் தாசிக்கு அனுப்பி வைப்பதா தமிழ்ப் பண்பு? இல்லை, இல்லை." என்று கூறும் கருத்துகள் ஏற்றுக் கொள்பவையாகவே உள்ளன (Thanthai Periyar, 2005).

மேலும் கண்ணகிக்கு, பூம்புகாரில் கோட்டம் அமைக்கப்பட்டது. அதுவும் பெரியாரின் வழித்தோன்றல்களாலே என்பது ஒருபுறம் இருந்தாலும் இவற்றை ஏன் செய்தார்கள் என்ற அரசியலும் பெரியார் இச்செயலை ஏன் எதிர்த்தார் என்பதும் தனித்தனியே புரிந்துகொள்ள வேண்டியது. அதனடிப்படையில், பெரியார் தன்னுடைய காலத்திலே இச்செயல் நிகழ்ந்ததைக் கண்டு, "நேற்றுக் கூட எனக்கு ரொம்ப வேதனை நம் நாட்டின் மந்திரி பூம்புகார் பத்தினிக் கோட்டத்திற்கு அடிக்கல் நாட்டி இருக்கிறார். நம் நாட்டிலிருக்கிற கோடிக் கணக்கான பெண்களில் அவள் ஒருத்திதான் பத்தினி என்றால் மற்ற பெண்கள் எல்லாம் யார்? உன் தாய், என் தாய், உன் தங்கை, என் தங்கை, மற்ற பெண்கள் அனைவரும் பத்தினித் தன்மை அற்ற விபசாரிகளா? இதை மக்கள் சிந்திக்க வேண்டும். எதற்காக ஒருத்தியை மட்டும் பத்தினி என்று புகழ வேண்டுமென்று கேட்கிறேன்."5 என்று மனவேதனை அடைகிறார். ஏன் இத்தகைய வேதனை என்று பார்த்தால் காலம் காலமாகப் பெண்கள் அடிமைப்பட்டிருக்கிறார்கள் என்ற வருத்தமே மேலிடுகிறது பெரியாரிடத்தில். அதன் காரமணாகவே 'கண்ணகிக் கதை பெண்களை முட்டாளாக்குகிறது' என்கிறார்.

பெண்கள் ஆண்களுக்கு அடிமையாக வாழ்வதற்கெனப் பல்வேறு கதைகளை தமிழர் பண்பாடு, கலாச்சாரம் என்ற பெயரில் இலக்கியமாக மாற்றியுள்ளனர் புலவர்கள். இவர்களின் பிற்போக்குத்தனத்தைத்தான் பெரியார் வன்மையாகக் கண்டிக்கிறார். இத்தகைய தன்மையெல்லாம் பார்ப்பனர்களின் ஊடாகவே, தமிழ் இலக்கியங்களை வந்தடைந்தன என்பது பல ஆய்வுகளின் முடிவாக உள்ளது. கண்ணகிக்குச் சிலை நிறுவிய அறிஞர் அண்ணாவினைக்கூட பெயரைக் குறிப்பிடாமல் பெரியார் கூறும்போது, "நம் அரசு கண்ணகிக்குச் சிலை வைத்து நம் சமுதாயத்தை - குறிப்பாகப்

பெண்கள் சமுதாயத்தைக் கேவலப்படுத்துவதாகும் என்று குறிப்பிட்டேன். ஏன் இப்படிக் குறிப்பிடுகின்றேன் என்றால், எதற்காக ஒரு பெண், தன் கணவன் இன்னொரு பெண்ணுடன் போனதற்காக உணவருந்தாமல், பாயில் படுக்காமல் இருக்க வேண்டும்? இது மடத்தனத்தைக் காட்டுகிறதே தவிர, கற்பைக் காட்டுவதாக இல்லை" என்கிறார் (Thanthai Periyar, 2005).

இவ்வாறான பல சான்றுகளையெல்லாம் எடுத்துக் கூறி, 'கண்ணகிக் கதை பெண்களை மடைச்சியாக்கப் பயன்படுமே தவிர, அறிவு வளர்ச்சிக்குப் பயன்படாது' என்கிறார். இத்தகைய கற்புடைய கண்ணகியைப் பின்பற்றி வாழ்பவர்கள் கண்ணகியைத் தவிர வேறொருவருக்கும் கற்பில்லை என்ற பிற்போக்குத் தனத்திற்கு உட்பட்டவர்கள் என்றே கருதமுடிகிறது. ஆக, எந்த ஒரு பெண்ணும் ஆணுக்கும் அடிமையாக இருக்க வேண்டாம் என்றும் இதற்குப் பகுத்தறிவுக்கு ஒவ்வாத நூல்களை ஒதுக்க வேண்டும் என்பதனையும் உணர முடிகிறது.

இத்தகைய நூல்களின் ஆய்வுகள் எல்லாம் உரை, நுண்பொருள் என்று அமைகிறது. இதில் உள்ள அனைத்து மூடத்தனத்தையும் சேர்த்து ஒரு நூலாக வெளியிட பெரியார் விரும்பினார். இதனைக் கருத்தில் கொண்டு, பல படைப்புகள் வெளியாயின. சான்றாக, 'தமிழரின் நெஞ்சைக் கொல்லும் சிலப்பதிகாரம்' என்ற நூல் சமீபத்தில் வெளியாகியுள்ளது குறிப்பிடத்தக்கது. இதன் தலைப்பினைக் கொண்டே நூலின் பொருண்மையை உணர்ந்து கொள்ளலாம்.

## மணிமேகலை

சிலப்பதிகாரத்தின் நீட்சியாக, மணிமேகலை என்னும் காப்பியத்தைக் கூறுவார்கள். கோவலனுக்கும் மாதவிக்கும் பிறந்தபெண்ணுக்கு மணிமேகலா என்னும் தெய்வத்தின் பெயரைச் சூட்டுகின்றனர். இக்காப்பியம் பௌத்தச் சமயச் சார்புடையது. 'சமயச்சார்புடையதால் இக்காப்பியத்தையும் பெரியார் ஏற்கவில்லை.' இருப்பினும் அதிக அளவில் மணிமேகலை குறித்துப் பேசாமல் ஒருசில முரண்களை மட்டும் சாடுகிறார். சான்றாக, "மணிமேகலா தெய்வம் மணிமேகலையை வான் வழியே கொண்டு சென்றுள்ளதாகவும், அமுதசுரபி போன்றவை பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துகளாகும்." என்கிறார் (Maniyan, 2005). மேலும் காப்பியங்கள் என்றாலே ஏதாவது ஒரு சமயத்திற்குட்பட்டதாகவே உள்ளதைக் கண்டிக்கிறார். மேலும், "இந்தக் காப்பியமானது,

1. உருவ வணக்கத்தைக் கண்டிக்கிறது.
2. ஆரியத்தை மறுக்கிறது.
3. தருமங்களில் சிறந்தது ஏழைகளுக்கு உணவு அளிப்பதுதான் என்கிறது.
4. பரத்தை ஒழிப்பை வலியுறுத்துகிறது.
5. மது ஒழிப்பு தேவை என்கிறது.
6. சிறை ஒழிப்பின் அவசியத்தைக் கட்டாயமாக்குகிறது.

எனவே, இந்த நூலில் பல நல்ல கருத்துகள் இடம் பெற்றுள்ளதால் பெரியாரின் விமரிசனத்திற்கு அல்லது ஆய்விற்கு இடமளிக்கவில்லை என்றே கருதலாம்" என்ற கருத்தும் இங்கு கவனிக்கத்தக்கதாகும் (Kamalakkannan, 2001). இவ்வாறாக, காப்பியங்கள் தவிர, அனைத்து இலக்கிய நூல்களிலும் பகுத்தறிவுக்கு ஒவ்வாத கருத்துகளையே சாடுகிறார் பெரியார். இவற்றினால் மக்களுக்கு விளையும் நன்மை என்ன என்பது குறித்து அனைவரும் சிந்திக்க வேண்டிய செய்தியாகும்.

## முடிவுரை

இவ்வாறாக, இரட்டைக்காப்பியங்களில் நடைமுறை நிகழ்வுகளுக்கு ஒவ்வாத கருத்துக்களை எல்லாம் சுட்டிக்காட்டிய தந்தை பெரியார், அதனைக் கடுமையாகச் சாடியுள்ளார் என்பதனை இக்கட்டுரையின் ஊடாக உணரமுடிகிறது. பல்வேறு இலக்கியங்களெல்லாம் சமயச் சார்புடையவை

என்று புறந்தள்ளிய பெரியார் ஆரம்ப காலத்தில் குறளையும் ஒதுக்கியுள்ளார். பின் புலவர்களின் அறிமுகத்தால் திருக்குறளுக்கு முதன் முதலில் மாநாடு நடத்தி, குறளினையும் வள்ளுவரையும் கொண்டாடுகிறார். குறளில் பிற்போக்குத் தன்மையான இடங்களில் 'இடைச் செருகல்' இருக்குமாறு கூறியுள்ள பெரியாரின் கூற்றும் ஆராய்ச்சிக்குரியது.

## References


Bharathidasan, (2007) Kuyil, Sentamil Pathippagam, Tirchy, India.

Kamalakkannan, (2001) lakkiyam Mozhi Kalai Kuriththu Periyar Sinthanaigal, Samooga needhi Pathippagam, Chennai, India.

Maniyan, R., (2005) Periyarin Ilakkiya Sinthanaigal, Purachi Paathai Pathippagam, Chennai, India.

Thanthai Periyar, (2005) Viduthalai, Purachi Paathai Pathippagam, Chennai, India.


**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License